

தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, திருநெல்வேலி மாநகராட்சி பகுதியில் பெய்த காற்றுடன் கூடிய திடீர் கோடை மழையின் காரணமாக மின் கம்பங்கள் சாய்ந்து மின் தடை ஏற்பட்டதை தொடர்ந்து, மேலப்பாளையம் ரோஸ் நகர் பகுதியில் நடைபெற்று வரும் பராமரிப்பு பணிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடித்து பொதுமக்களுக்கு உடனே மின்சாரம் வழங்கிட அறிவுறுத்தினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் மரு. இரா.சுகுமார், மாநகராட்சி ஆணையாளர் மரு. என்.ஓ.சுகபுத்தரா, திருநெல்வேலி மண்டல மின்வாரிய தலைமை பொறியாளர் லதா, மேற்பார்வை பொறியாளர் அகிலாண்டேஸ்வரி, செயற்பொறியாளர் வெங்கடேஷ் மணி, செயற்பொறியாளர் ஜெயசீலன் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள், முன்னாள் அமைச்சர் மைதீன் கான் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரை! அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமை!

# ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர்கள் முனைவர் பி.பழனியப்பன் - ஆ.மணி எம்.பி. அறிக்கை!





தருமபுரி, மே 18-

தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன், தருமபுரி கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆ.மணி எம்.பி. ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஒருங்கிணைந்த தர்மபுரி மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நாளை (19.05.2025 திங்கட்கிழமை) காலை 10 மணி அளவில் தருமபுரி திராவிட முன்னேற்ற கழக அலுவலகத்தில் கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினரும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினரும், பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு கலந்து கொண்டு 2026 சட்டமன்ற தேர்தல் பணிகள் மற்றும் கழக அக்கப் பணிகள் குறித்தும் ஆய்வு மற்றும் ஆலோசனைகளை வழங்க உள்ளார்.

அது சமயம் முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற தொகுதிப் பார்வையாளர்கள், மாநில மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பொருள்:

2026 சட்டமன்றத் தேர்தல் பணி குறித்தும், கழக அக்க பணிகள் குறித்தும்

இவ்வாறு தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் பி. பழனியப்பன், தருமபுரி கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆ.மணி எம்.பி. ஆகியோர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.




சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன், 16.05.2025 அன்று தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் திட்டப் பணிகள் குறித்து அய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வின் போது சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர்.க.மணிவாசன், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி. ஷில்பா பிரபாகர் சதீஷ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஏ. கோவிந்தசாமி

### மே 18 (1969)



மொழிப்போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர். 1952ல் தி.மு.க. ஆதரவோடு போட்டியிட்டு விக்கிரவாண்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினரானார்.

கழகம் நடத்திய மும்முனைப் போராட்டத்தில் முன்னணித் தலைவர்கள் அனைவரும் கைதாகி சிறை சென்றபோது, அண்ணா அவர்களால் கழக பொறுப்பாளராக நியமனம் செய்யப்பட்டவர்.

தி.மு.க. தொழிற்சங்கச் செயலாளராகப் பணியாற்றியவர்.

அண்ணா அவர்களின் நம்பிக்கைக்கு உரியவரானார். தலைவர் கலைஞரின் உற்ற நண்பராக விளங்கியவர்.

1967ல் அண்ணா அமைச்சரவையிலும், அண்ணா மறைவுக்குப் பிறகு தலைவர் கலைஞர் அமைச்சரவையிலும் பணியாற்றியவர்.

"கொள்கை குன்றம் கோவிந்தசாமி" என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# 11ஆம் வகுப்பு பொதுத்தேர்வு 92.09 சதவிகித தேர்ச்சி!

சென்னை, மே 18-

தமிழ்நாட்டில் கடந்த மார்ச் 5 ஆம் தேதியிலிருந்து 27 ஆம் தேதி வரை நடைபெற்ற,11 ஆம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. அதில், 92.09 சதவீத மாணவ, மாணவிகள் தேர்ச்சி பெற்றுள்ளனர். அதன்படி, தேர்வு எழுதிய மாணவ, மாணவிகளில் 7,43,232 பேர் தேர்ச்சி அடைந்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. 11 ஆம் வகுப்பு தேர்வுகளில் 4,03,949 மாணவியர்களும், 3,39,283 மாணவர்களும் தேர்ச்சி பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மாணவர்களை விட 6.43% மாணவியர் அதிகம் தேர்ச்சி பெற்றுள்ளனர். அறிவியல் பாடத்தில் 95.08 சதவீதமும், வணிகவியலில் 87.33 சதவீதமும் தேர்ச்சி பெற்றுள்ளனர். கலைப் பிரிவில் 77.94 சதவீதமும், தொழிற்பாடப் பிரிவில் 78.31 சதவீத மாணவ, மாணவிகளும் தேர்ச்சி அடைந்துள்ளனர். 11 ஆம் வகுப்பு தேர்வில் அதிக தேர்ச்சி சதவீதம் பெற்ற மாவட்டங்களில் அரியலூர் மாவட்டம் முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளது.



# தி.மு.க. இளைஞர் அணி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

### ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், இளைஞர் அணி மாவட்ட–மாநகர–மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து, கீழ்காணும் சட்டமன்றத் தொகுதிகளில் மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. அதன் விவரம் வருமாறு:

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 18.05.2025 | வேலூர் | குடியாத்தம் | பேரணாம்பட்டு பேருந்து நிலையம் அருகில் | மாண்புமிகு கோவி.செழியன், ம.ஜ.சந்தீப் |
| 2 | 18.05.2025 | நீலகிரி | உதகை | கூக்கல்தொரை | மருத்துவர் ப.மீ.யாழினி, சி.கா.சுகன்மந்த்ரன் |

### ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

சென்னை வடகிழக்கு, தஞ்சாவூர் வடக்கு, புதுக்கோட்டை வடக்கு & தெற்கு, நாகப்பட்டினம் மற்றும் தஞ்சாவூர் தெற்கு மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 18.05.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | சென்னை வடகிழக்கு | டி.கே.பி திருமண மாளிகை, திருவொற்றியூர், சென்னை–19. |
| 22.05.2025 வியாழக்கிழமை | காலை 10.00 மணி | தஞ்சாவூர் வடக்கு | ரயாஸ் கிராண்ட் ஹோட்டல், மகாமகம் குளம் எதிரில், கும்பகோணம். |
| 24.05.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | புதுக்கோட்டை வடக்கு & தெற்கு | கற்பகவிநாயகா திருமண மண்டபம், மாலையீடு, புதுக்கோட்டை. |
| 26.05.2025 திங்கள்கிழமை | காலை 10.00 மணி | நாகப்பட்டினம் | தளபதி அறிவாலயம், நாகப்பட்டினம். |
| 27.05.2025 செவ்வாய்க்கிழமை | காலை 10.00 மணி | தஞ்சாவூர் தெற்கு | ஏஏஏ பேலஸ், பேருந்து நிலையம் அருகில், பட்டுக்கோட்டை. |

### சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி!

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 1–இல் கீழ்க்கண்ட 6 சட்டமன்றத் தொகுதியில் நடைபெறும் சமூக வலைத்தளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 18.05.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | திருவொற்றியூர் | டி.கே.பி திருமண மாளிகை, திருவொற்றியூர், சென்னை–19. |
| | மாலை 4.00 மணி | வில்லிவாக்கம் | டபிள்யூ.பி.ஏ.சவுந்திர பாண்டிய நாடார் பள்ளி வளாகம், என்.எம்.கே.தெரு, அயனாவரம், சென்னை–23. |
| 19.05.2025 திங்கள்கிழமை | மாலை 4.00 மணி | விருகம்பாக்கம் | கோல்டன் பேரடைஸ் திருமண மண்டபம், சாலிகிராமம், சென்னை–93. |
| 20.05.2025 செவ்வாய்க்கிகிழமை | மாலை 4.00 மணி | மதுரவாயல் | ஸ்ரீ ராஜலட்சுமி மகால், 4, பிள்ளையார் கோயில் தெரு, ஆற்காடு சாலை, கணபதி நகர், போரூர், சென்னை–116. |
| | மாலை 4.00 மணி | அம்பத்தூர் | கே.எஸ்.பி. மகால், 12, காமராஜர் சாலை, கோபால் நாயக்கர் நகர், பாடி, சென்னை–50. |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 15-05-2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி



கோவை மாநகர் மாவட்டக் கழகத்தின் சார்பில் "நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு! கழக சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் மாநகர் மாவட்ட துணை செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், தளபதி இளங்கோ, கல்பனா செந்தில், பொருளாளர் எஸ்.எம்.பி.முருகன், சிங்காநல்லூர் பகுதி1 செயலாளர் எஸ்.எம்.சாமி முன்னிலையில் பொதுக்குழு உறுப்பினர் வெ.சசிக்குமார் வரவேற்புரையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர், நகைச்சுவைத் தென்றல் திண்டுக்கல் ஐ.லியோனி, மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் சிறப்புரையாற்றினர். இதில் சிங்காநல்லூர் தொகுதி பார்வையாளர் முத்துவேல் ராமசாமி, கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மறை, தலைமைச் செயற்குழு உறுப்பினர் வே.பாலசுப்பிரமணியன், பொதுக்குழு உறுப்பினர்கள் இரா.மணிகண்டன், மு.மா.ச.முருகன், தலைமைக் கழகப் பேச்சாளர் கோவை சம்பத், பகுதிச் செயலாளர்கள் சிங்கை மு.சிவா, ப.பசுபதி, கோவை லோகு, மார்க்கெட் எம்.மனோகரன், இரா.சேரலாதன், வி.ஐ.பதுருதீன், மாநகராட்சி மண்டலத்தலைவர்கள் இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக், மேற்கு தெய்வயானை தமிழ்மறை, நிலைக்குழுத் தலைவர்கள் பெ.மாரிச்செல்வன், தீபா தளபதி இளங்கோ, சாந்தி முருகன், வி.பி.முபசீரா உள்பட கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.